

# பேராலய ஒலி

## பங்கு மாத இதழ்



ஒலி – 06 ஜனவரி – 2021 அலை – 1

# உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்



# பங்குப் பணியாளர்களிடமிருந்து...

**அன்புக்குரியவர்களே,**

புலர்ந்திருக்கும் புத்தாண்டில் நீண்ட கொரோனா இடைவெளிக்குப் பிறகு பேராலய ஒலி மூலம் தங்களோடு உரையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி. கலைந்துபோகும் கொரோனா மேகங்களோடே ஒரு புதிய ஆண்டை கடவுள் தம் வியத்தகு அருள்பராமரிப்பு திட்டத்தில் நமக்கு கொடையாக தந்துள்ளார்.

கொரோனா கால கொடுமைகள் பல கண்டோம். பெரும் அச்சத்தோடு வாழ்ந்தோம்; ஒருவர் மற்றவரை அணுகிச் செல்லவும், ஆசையுடன் கைகுலுக்கவும் கூட தயங்கினோம்; வேலை, தொழில் முடங்கி பொருளாதாரத்தில் கையறு நிலை உணர்ந்தோம்; கோயில், பொது வழிபாடு இன்றி தவித்தோம், செய்வதறியாது திகைத்தே ஏறக்குறைய ஒன்பது மாதங்கள் கடந்தன. தீமையிலும் நன்மை என்பதுபோல வீட்டில் நம் அன்பு உறவுகளோடு கூடுதலாக நேரம் செலவிட்டோம். வீட்டு உணவே உண்டோம். தேவையற்ற வெளிப்பயணங்கள் இல்லை. காற்று மாசு குறைந்தது. வாழும் சூழல் தூய்மையானது. மழையும் வழக்கத்தை விட கூடுதலாக பெய்தது. மனித இடையூறு இன்றி இயற்கை செழித்தது, பிற உயிர்கள் இயல்பாய் வாழ்ந்தன. இயற்கையின் நெடிய போக்கில் இதுபோன்ற நிகழ்வுகள் பூமி தன்னை தகவமைத்துக்கொண்டு புதுப்பித்துக் கொள்ளும் அனுபவங்களோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

சற்று கூடுதலான உற்சாகத்தோடே கிறிஸ்து பிறப்பு விழாவையும், புத்தாண்டு பெருநாளையும், திருக்காட்சி பெருவிழாவையும் கொண்டாடி மகிழ்ந்தோம். கொரோனாவால் தேக்கமடைந்த கோயில், வழிபாடு, கொண்டாட்டங்கள் மடைதிறந்த வெள்ளமென புறப்பட்டதைக் காண முடிந்தது. கொரோனாவும் கடந்து போகும். முறிந்த சிறகுகளுக்கு பதிலாகப் புதிய சிறகுகள் முளைக்கும். கலைந்த கனவுகளும் நிறைவேறும். காலந்தோறும் காத்திட்ட கடவுளின் பேரருள் தொடர்ந்து நம்மை சூழ்ந்து நின்று காக்கும் என நம்புவோம். இறைவனின் அழகிய பராமரிப்பில் நம்பிக்கைகொண்டு புதிதாய் பிறந்த புத்தாண்டில் புதிய மனிதர்களாய், உயர்ந்த எண்ணங்களால் ஏற்றம் பெற்று, புதிய பார்வைகளோடு, புதிய நம்பிக்கைகளோடு உள்ளம்நிறை ஊக்கத்தோடு ஒரு புதிய பயணத்தைத் தொடர்வோம்.

இம்மாதம் 14-ம் தேதி அன்று தமிழர் தம் புத்தாண்டையும் பொங்கல் திருநாளையும் தமிழ்கூறும் நல்லுலகோரோடு இணைந்து உவந்து கொண்டாடுவோம். தமிழ்ப் புத்தாண்டு தமிழகத்தில் புதிய விடியலாய் அமையட்டும். கடவுள் தங்களுக்கு வாக்குறுதி அளித்தவாறே உங்களை மேன்மேலும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

*"ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச் செய்து உன்மீது அருள் பொழிவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக!"* (எண் 6:24-26)

ஆசியுடன்,

**அருள்திரு. த. சகாயராஜ்,** பங்குப்பணியாளர்

**அருள்திரு. சு. மரியசூசை,** உதவிப்பங்குப்பணியாளர்

## டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்தவை

- 8ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நமது மறைமாவட்ட பாதுகாவலி புனித அமல அன்னையின் பெருவிழாவானது கொண்டாடப்பட்டது.
- 15, 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் நம் பங்கிலுள்ள 10 கிளைப்பங்கு ஆலயங்கள் மற்றும் துறவற இல்லங்களில் கிறிஸ்துமஸ் கேரல்ஸ் பாடப்பட்டது.
- 21ஆம் தேதி மாலை நம் பங்கிலிருந்து அம்மாபேட்டை பங்கைச் சேர்ந்த முத்தனம்பட்டி என்கிற கிராமத்திற்குச் சென்றோம். கிறிஸ்து பிறப்பு பெருவிழாவைச் சிறப்பிக்கும் விதத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பின்னர் கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. அக்கிராம மக்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இரவு உணவு வழங்கப்பட்டது.
- 23ஆம் தேதி மாலை 6 மணிக்கு ஆண்டவர் இயேசுவின் பிறப்புப் பெருவிழாவை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடும் வகையில் நம் பேராலயத்தில் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது.
- 24ஆம் தேதி நள்ளிரவு 11 மணிக்கு கிறிஸ்து பிறப்பு இன்னிசை கீதங்கள் பாடப்பட்டன. அதனைத் தொடர்ந்து 11.50 மணிக்கு கிறிஸ்து பிறப்பு பெருவிழா சிறப்புத் திருப்பலியானது பேராலயத்தில் நிறைவேற்றப்பட்டது.

- 27ஆம் தேதி திருக்குடும்ப ஞாயிறு அன்று காலை 8.30 மணி மற்றும் மாலை 6.15 மணி ஆகிய திருப்பலிகளில் பங்கு மக்கள் குடும்பங்களாக பங்கு பெற்று சிறப்பித்தனர்.
- 28ஆம் தேதி மாசில்லாக் குழந்தைகள் திருநாளை முன்னிட்டு மாலை 6.15 மணி திருப்பலியில் குழந்தைகளுக்காக சிறப்பு செபம் செய்யப்பட்டு ஆசீர் அளிக்கப்பட்டது. எட்டு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு விவிலிய மனப்பாடப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.
- 31ஆம் தேதி நள்ளிரவு 11 மணிக்கு நன்றி வழிபாடு நடைபெற்றது. பிறகு 11.50 மணிக்கு புத்தாண்டு பெருவிழா 2021 சிறப்புத் திருப்பலியானது நிறைவேற்றப்பட்டது.

## ஜனவரி மாதத்தில் நிகழவிருப்பவை

- 14-ஆம் தேதி மாலை 4 மணிக்கு அன்பியங்கள் சார்பாக கோலப் போட்டியும், 4.30 மணிக்கு பொங்கலிடும் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து சிறப்புத் திருப்பலியும் நடைபெறும். திருப்பலி முடிந்தவுடன் நமது பங்கின் அன்பியங்கள், இளையோர் இயக்கத்தின் சார்பாகக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். அதன்பிறகு கயிறு இழுத்தல் போட்டியும் பானை உடைத்தல் போட்டியும் நடைபெறும்.
- 26-ம் தேதி குடியரசு தினவிழாவை முன்னிட்டு நமது பேராலயத்தில் காலை திருப்பலி முடிந்தவுடன் தேசியக் கொடி ஏற்றப்படும்.

## வாருங்கள் கொண்டாடுவோம்



தமிழால் இணைவோம்!
தமிழராய் வெல்வோம்!
தமிழ் மொழியைக் கொண்டாடுவோம்!
தமிழ் மரபைப் போற்றுவோம்!
தமிழன் என்று சொல்வோம்!
தலை நிமிர்ந்து நிற்போம்!

**நாள் : 14.01.2021, வியாழன்**
**நேரம் : மாலை 6.00 மணி**

## புனித யோசேப்பு ஆண்டு

# புனித வளன் – முன்னுதாரணமான தந்தை

ஒவ்வொரு குடும்பமும் ஒரு குட்டித் திரு அவை. அனைத்து நற்பண்புகளும் நற்செயல்களும், விசுவாசமும் அறிவும், ஆற்றலும் கலையும், கலாச்சாரமும் பண்பாடும் ஊற்றெடுப்பது குடும்பங்களிலிருந்துதான் என்றால் அது மிகையல்ல. "நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்கிறோம். ஒரு குடும்பத்தின் தலைவர் தந்தையே. இவ்வுலகின் முதல் தந்தை ஆதாம்! அவரையே இறைவன் முதலில் படைத்தார். எனவே, தந்தையர்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள். முதல் மரியாதைக்கு உரியவர்கள்.

குடும்பங்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்கிறது - இயேசு, மரி, சூசை வாழ்ந்த திருக்குடும்பம். இக்குடும்பத்தின் தலைவரான புனித வளனின் பணி: அமைதிப் பணி, அன்புப் பணி, ஆக்கமூட்டும் பணி. இயேசுவின் மீட்புப் பணியில் அவருடைய பங்கு மிகப் பெரிது. ஆனால், நாம் அதை இவ்வளவு காலம் உணரத் தவறிவிட்டோம்; நினைத்துப் பார்க்க மறந்து விட்டோம்.

எனவே தான்போலும், திருத்தந்தை அருளாளர் 9-ஆம் பயஸ், 1870 ஆண்டு டிசம்பர் 8-ஆம் தேதி புனித வளனாரை உலகளாவிய திரு அவையின் பாதுகாவலராக அறிவித்தார். இவ்வாறு அறிவிக்கப்பட்டதன் 150-ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, நம் தற்போதையத் திருத்தந்தை பிரான்சிஸ் 2020ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள் - அதாவது "ஒரு தந்தையின் இதயத்தோடு" என்ற தலைப்பில் திருத்தூது மடல் ஒன்றை வெளியிட்டு 2021- டிசம்பர் 8ம் தேதி முடிய புனித யோசேப்பு ஆண்டு என்று அறிவித்துள்ளார். இது திரு அவை புனித வளனுக்கு சூட்டிய மணி மகுடம்!

அருமையான தந்தை, அன்பும் கனிவும் நிறைந்த தந்தை, பணிவுள்ள தந்தை, ஏற்றுக் கொள்ளும் தந்தை, படைப்பாற்றல் மிக்க துணிவுள்ள தந்தை, உழைப்பாளித் தந்தை என்ற ஆறு தலைப்புகளில் புனித சூசையைப் பற்றி விளக்கியுள்ள திருத்தந்தை, நம் மனமாற்றத்திற்காக புனித சூசையிடம் மன்றாடுவோம் - என்ற ஒரு சிறிய செபத்துடன் இம்மடலை நிறைவு செய்துள்ளார்.

"இயேசுவின் வளர்ப்புத் தந்தைக்கென, சிறப்பான ஓர் ஆண்டை அர்ப்பணித்துள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் "புனித வளன்,

பொது மக்களால் அதிகம் கவனிக்கப்படாத, அதே நேரம் காலமறிந்து செயல்படும் மறைவான வாழ்வு வாழ்ந்தவர். ஆயினும், அவர் மீட்பு வரலாற்றில் எதனாலும் ஒப்பிடப்பட முடியாத செயல்பாட்டாளராக இருந்தார். இதனாலேயே, இந்த புனிதர், கிறிஸ்துவர்களால் எப்போதும் அதிகம் அன்புக் கூறப்படுகிறார் என்றுக் குறிப்பிட்டுள்ளார்" திருத்தந்தை பிரான்சிஸ்.

"தந்தையர்கள் பிறக்கும்போதே அவ்வாறு பிறப்பதில்லை. அவர்கள் ஒரு குழந்தையின் வாழ்வின் மீது பொறுப்பேற்கும்போது தந்தையராக மாறுகின்றனர் என்றும், இன்றைய சமுதாயத்தில், குழந்தைகள் பல நேரங்களில் தந்தையர்களால் கைவிடப்பட்ட அநாதைகளாக இருப்பது கவலைத் தருகிறது" என்றும் கூறியுள்ள திருத்தந்தை, இன்றைய உலகிற்கு, புனித வளன் சிறந்த எடுத்துக்காட்டான மனிதராக உள்ளார் என்றும் "இன்றைய உலகிற்கு முதலாளிகள் அல்ல தந்தையர்களே தேவைப்படுகின்றனர்" என்றும் கூறியுள்ளார்.

19ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு மொழியில் வெளிவந்த 'புனித யோசேப்பு பக்தி முயற்சிகள்' என்ற நூலிலுள்ள செபத்தை ஒவ்வொரு நாளும், தான் சொல்வதாக 'ஒரு தந்தையின் இதயத்தோடு' (Patris Corde) என்ற தன் திருத்தூது மடலில் நம் திருத்தந்தைக் குறிப்பிட்டுள்ளார்.

புனித யோசேப்பு ஆண்டில் சிறப்பு நிறைபேறு பலன்களை அறிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, "புனித சூசையே... ஒரு நல்ல தந்தையாக வாழும் வாழ்வுப் பாதையை எமக்குக் காட்டியருளும். இரக்கமும் துணிவும் நிறைந்த அருளை எமக்குப் பெற்றுத் தாரும்" என்று செபித்து இந்த மடலை நிறைவு செய்துள்ளார்.

நற்செய்தியில் ஒரு சில இடங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள புனித சூசை ஒரு நீதிமான், இறைத் திருவுளத்தை ஏற்று வாழ்ந்தவர், வல்லமைமிக்க புனிதர் என்பதையெல்லாம்விட அவர் எல்லா குடும்பத் தலைவர்களுக்கும் ஒரு முன் மாதிரிகை என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக, இவ்வாண்டு (2021) முழுவதும் புனித வளனாருக்கு வணக்கமும் மரியாதையும் செலுத்தி அவரை நினைவு கூருவோம்; இதன் வழியாக இறைவனை மாட்சிப்படுத்துவோம்.

புனித வளனே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!

**திருமிகு. வி. லீமா ரோஸ்**

# புத்தாண்டு வாக்குறுதி – உண்மையுள்ளவர்களாக வாழ்வோம்!

*நமது வாழ்வில் உண்மை எங்கெல்லாம் காணப்பட வேண்டும்?*

1. **வாயில்** : (திப 5:9) ஏனெனில், அவர்கள் வாயில் உண்மை இல்லை; அவர்கள் உள்ளம் அழிவை உண்டாக்கும்; அவர்கள் தொண்டை திறந்த பிணக்குழி; அவர்கள் நா வஞ்சகம் பேசும்.

2. **உள்ளத்தில்** : (திப 51:6) இதோ! நீர் விரும்புவது உள்ளத்து உண்மையையே; மெய்ஞானத்தால் என் மனத்தை நிரப்பும்.

3. **பொறுப்புகளில்** : (மத் 25:23) அவருடைய தலைவர் அவரிடம், நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே. சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்.

4. **உலக பொருளில்** : (லூக் 16:11) நேர்மையற்ற செல்வத்தைக் கையாளுவதில் நீங்கள் நம்பத்தகாதவராய் இருந்தால் யார் உங்களை நம்பி உண்மைச் செல்வத்தை ஒப்படைப்பார்?

5. **சிந்தனையில்** : (பிலிப்பியர் 4:8) இறுதியாக, சகோதர சகோதரிகளே, உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துங்கள்.

6. **பேச்சில்** : (செக்கரியா 8:16) நீங்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டியவை இவையே. ஒருவரோடு ஒருவர் உண்மை பேசுங்கள்.

7. **ஆராதனையில்** : (யோபு 4:24) கடவுள் உருவமற்றவர், அவரை வழிபடுவோர் அவரது, உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபட வேண்டும் என்றார்.

8. **செபத்தில்** : (திப 145:18) தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்.

9. **இறைவார்த்தைகளை கடைப்பிடிப்பதில்** : (எசேக்கியேல் 18:9) என் நியமங்களையும் நீதி நெறிகளையும் கடைப்பிடித்து, உண்மையுள்ளவனாக நடந்து கொண்டால், அவன் நீதிமான் ஆவான்.

10. **இறைவார்த்தை பகிர்வில்** : (எரேமியா 23:8) என் சொல்லைத் தன்னிடத்தில் கொண்டிருப்பவனோ அதனை உண்மையோடு எடுத்துரைக்கட்டும்.

வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவான் 14:6) என்ற இயேசுவின் வார்த்தைகளை மனதில் இருத்தி, நமது அன்றாட வாழ்வின் செயல்களில் நம் கடவுளுக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் உண்மையாய் வாழ முற்படுவோம்.

திருமிகு. **ஜெயந்தி**

# திருவழிபாட்டு நாள்காட்டி

| நாள் | கிழமை | புனிதர்களின் நினைவு | முதல் & இரண்டாம் வாசகங்கள் | நற்செய்தி வாசகம் |
|---|---|---|---|---|
| 1. | வெள்ளி | புனித கன்னி மரியா | எண் 6:22-27<br>கலா 4:4-7 | லூக் 2:16-21 |
| 2. | சனி | புனிதர்கள் பெரிய பேசில்,<br>நசியான் நகர்ப் புனித கிரகோரி | 1 யோவா 2:22-28 | யோவா 1:19-28 |
| 3. | ஞாயிறு | ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா | எசா 60:1-6<br>எபே 3:2-3a, 5-6 | மத் 2:1-12 |
| 4. | திங்கள் | | 1 யோவா 3:22-4; 6 | மத் 4:12-17, 23-25 |
| 5. | செவ்வாய் | புனித ஜான் நியூமேன் | 1 யோவா 4:7-10 | மாற்கு 6:34-44 |
| 6. | புதன் | | 1 யோவா 4:7-10 | மாற்கு 6:45-52 |
| 7. | வியாழன் | புனித பென்யபோர்ட் ரெய்மண்ட் | 1 யோவா 4:19-5:4 | லூக் 4:14-22 |
| 8. | வெள்ளி | | 1 யோவா 5:5-13 | லூக் 5:12-16 |
| 9. | சனி | | 1 யோவா 5:14-21 | யோவா 3:22-30 |
| 10. | ஞாயிறு | ஆண்டவருடைய திருமுழுக்கு பெருவிழா | எசா 55:1-11<br>1 யோவா 5:1-9 | மாற்கு 1:7-11 |
| 11. | திங்கள் | | எபி 1:1-6 | மாற்கு 1:14-20 |
| 12. | செவ்வாய் | | எபி 2:5-12 | மாற்கு 1:21-28 |
| 13. | புதன் | புனித ஹிலாரி | எபி 2:14-18 | மாற்கு 1:29-39 |
| 14. | வியாழன் | அருளாளர் தேவசகாயம் | எபி 3:7-14 | மாற்கு 1:40-45 |
| 15. | வெள்ளி | | எபி 4:1-5,11 | மாற்கு 2:1-12 |
| 16. | சனி | புனித ஜோசப் வாஸ் | எபி 4:12-16 | மாற்கு 2:13-17 |
| 17. | ஞாயிறு | பொதுக்காலத்தின் 2-ஆம் ஞாயிறு | 1 சாமு 3:3b-10, 19<br>1 கொரி 6:13c-15a, 17-20 | யோவா 1:35-42 |
| 18. | திங்கள் | | எபி 5:1-10 | மாற்கு 2:18-22 |
| 19. | செவ்வாய் | | எபி 6:10-20 | மாற்கு 2:23-28 |
| 20. | புதன் | புனித பபியான்; புனித செபஸ்தியார் | எபி 7:1-3, 15-17 | மாற்கு 3:1-6 |
| 21. | வியாழன் | புனித ஆக்னஸ் | எபி 7:25-8:6 | மாற்கு 3:7-12 |
| 22. | வெள்ளி | புனித வின்செண்ட் | எபி 8 :6b-13 | மாற்கு 3:13-19 |
| 23. | சனி | | எபி 9 :2-3, 11-14 | மாற்கு 3:20-21 |
| 24. | ஞாயிறு | பொதுக்காலத்தின் 3-ஆம் ஞாயிறு | யோனா 3:1-5,10<br>1 கொரி 7:29-31 | மாற்கு 1:14-20 |
| 25. | திங்கள் | திருத்தூதரான புனித பவுலின் மனமாற்றம் | திப 22:3-16 | மாற்கு 16:15-18 |
| 26. | செவ்வாய் | இந்தியக் குடியரசு தினம் | எரே 31:31-34<br>1 திமொ 2:1-6 | யோவா 8:31-36 |
| 27. | புதன் | புனிதர்கள் திமொத்தேயு, தீத்து; ஆயர்கள்<br>புனித அஞ்சலா மெரிச்சி | எபி 10:11-18 | மாற்கு 4:1-20 |
| 28. | வியாழன் | அக்குயினோ நகர்ப் புனித தாமஸ் | எபி 10:19-25 | மாற்கு 4:21-25 |
| 29. | வெள்ளி | | எபி 10:32-39 | மாற்கு 4:26-34 |
| 30. | சனி | | எபி 11:1-2, 8-19 | மாற்கு 4:35-41 |
| 31. | ஞாயிறு | பொதுக்காலத்தின் 4-ஆம் ஞாயிறு | இச 18:15-20<br>1 கொரி 7:32-35 | மாற்கு 1:21-28 |

# அன்பிய வழிகாட்டி

1. **தூய ஆவியார் பாடல்** : இறைபிரசன்னத்தை உணர்தல், தூய ஆவியானவரின் பாடலைப் பாடவும். இறைவார்த்தையை சொல்லி ஆண்டவரை ஆராதனை செய்யலாம்.

2. **வரவேற்றல்** :அன்பிய கூட்டத்திற்கு பங்கேற்க வருபவர்களை அன்பிய இல்லத்தார் மலர்ந்த முகத்துடன் வரவேற்றல்.

3. **அன்பிய இறைவேண்டல்** (10 மணி செபம்) : விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே... செபத்துடன் ஆரம்பித்து ஒவ்வொரு மணியிலும் நமது கருத்துக்களுக்காக ஒப்புக் கொடுத்து செபித்து, அருள் நிறைந்த மரியே வாழ்க செபம் சொல்லவும்.

4. **கடந்த கூட்ட அறிக்கை** : கடந்த மாதம் நடைபெற்ற கூட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையை வாசித்தல்.

5. **இறைவார்த்தை வாசித்தல்** : நற்செய்தி வாசகம் - மாற்கு 1:7-11 (இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கலாம்)

6. **நற்செய்தி வாசகம்** - மாற்கு 1:7-11

7. **இறைவார்த்தையை பகிர்தல்** : வாசிக்கப்பட்ட நற்செய்தியில் தங்கள் மனதைத் தொட்ட வார்த்தைகளை அறிவித்தல். இந்த செய்தியை நான் எப்படி பார்க்கிறேன், என் வாழ்வில் கடைப்பிடிக்கிறேன் என்ற சிந்தனைகளை பகிர்ந்து கொள்ளலாம்.

- இயேசுவின் திருமுழுக்கு அவரை இறைவனின் மகனாக வெளிப்படுத்தியது. நம்முடைய திருமுழுக்கும் நம்மை இறைவனின் மகனாக, மகளாக வாழும்படி அழைக்கிறது.
- திருமுழுக்கு யோவானைப் போன்று தாழ்ச்சியுடன் வாழப் பழக வேண்டும்.
- திருமுழுக்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி இறைத்தந்தையின் பிள்ளைகளாக இறுதி வரை வாழ வேண்டும்.

8. **பரிந்துரை மன்றாட்டுகள்** :

- கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் நலம் பெற
- அன்பியக் குடும்பங்களின் ஒற்றுமை மற்றும் சமாதானத்திற்காக
- விவசாயிகளுக்காக, இயற்கை பேணிக் காக்கப்பட

(இறுதியாக விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே என்ற செபம் சொல்லவும்)

9. **செய்திகள் பகிர்வு** : திரு அவை செய்திகள், பங்கு நிகழ்வுகள், அன்பிய நிகழ்வுகள்

10. **வாழ்த்து கூறுதல்** : அன்பியக் குடும்பங்களில் இந்த மாதம் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளை கொண்டாடுபவர்களுக்கு வாழ்த்துகளை பரிமாறுதல்.

11. **நன்றி கூறுதல்** : கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் நன்றிகளை தெரிவித்தல்.

12. **மரியன்னைக்கு புகழ் பாடல்**

# புனித வின்சென்ட் தே பவுல் சபையின் கிறிஸ்து பிறப்பு விழா 2020

இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை சபை உறுப்பினர்கள், 12.12.2020 மாலை 4 மணிக்கு, புனித மரியன்னை பேராலய கீழ்த்தளத்தில், கல்வி உதவி பெறும் மாணவ, மாணவிகள் மற்றும் தத்துவக் குடும்ப உதவி பெறுபவர்களோடுக் கொண்டாடினர். புனித மரியன்னை பேராலய பங்குத்தந்தை அருள்பணி. T. சகாயராஜ் விழாவிற்கு தலைமைத் தாங்கினார். உதவிப் பங்குத்தந்தை அருள்பணி. S. மரிய சூசை முன்னிலை வகித்தார். இறை வணக்கப் பாடலுடன் விழா ஆரம்பமானது. சபைத் துணைத் தலைவர் சகோதரர் M. ஜோசப் மார்ட்டின் விழாவின் நோக்கத்தை எடுத்துக்கூறி, வந்தவர்களை வரவேற்று பேசினார். அருள்பணி. S. மரியசூசை சபையின் பணிகளைப் பாராட்டி மேலும் சிறக்க வாழ்த்தினார்.

பின்னர், இந்த கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக வந்தவர்கள் சபையை வாழ்த்திப் பேசியதுடன் வந்திருந்தோருக்கு கிறிஸ்துமஸ் செய்தி கூறினார்.

இதனைத் தொடர்ந்து சபையினரிடமிருந்து கல்வி உதவித் தொகைப் பெறும் 115 மாணவர்களுக்கும் 25 தத்துக் குடும்பத்தவருக்கும் ரூ.500/- கிறிஸ்துமஸ் பரிசாக வழங்கப்பட்டது.

இறுதியில் சபைத் தலைவர் சகோ. விக்டர் நன்றி கூற, பாப்பிறைப் பண்ணுடன் கூட்டம் முடிந்தது. பின்னர் கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியை வெளிப்படுத்தம் விதமாக வந்திருந்த அனைவருக்கும் இனிப்பு, காரம் வழங்கப்பட்டது.

திருமிகு. **விக்டர்**



# கேள்வி ஒன்று பதில்கள் பல...

**கேள்வி : 2020 ஆண்டு உங்களுடைய வாழ்க்கையில் எப்படி இருந்தது? 2021 ஆண்டை எவ்வாறு எதிர்ப்பார்க்கின்றீர்கள்?**

**ஸ்டீன்** (வயது 50) : கடவுள் படைச்ச எல்லா வருஷமும் நல்ல வருஷமா அமையனும்னு தான் நாங்க எதிர்பார்க்கின்றோம். ஆனா எதிர்பாராத விதமாக 2020 இல் ஒரு நோய் தொற்று வந்துருச்சு. ஆனா வரபோற 2021 எந்த ஒரு நோய் தொற்றும் இல்லாமல், மக்கள் அனைவரும் சந்தோசமாக இருக்கனும்.

**ஆண்டனி விஜய்** (வயது 34) : என்னுடைய வாழ்க்கையில் 2020 ரொம்ப நல்ல ஆண்டாகவே இருந்துச்சு, ஏன்னா எல்லாருக்கும் lockdown இருந்துச்சு. ஆனா எனக்கு 24 மணி நேரமும் வேலை இருந்துச்சு. ஏன்னா நான் வேலை பார்க்கின்ற இடம் அப்படி. நான் வேலை பார்த்தா தான் மக்களுக்கும், குழந்தைகளுக்கும் அத்தியாவசிய பொருட்கள் போய் சேரும். இப்போ வர நல்லபடியா பொருட்கள் போய்க்கிட்டு இருக்கு, அதே மாதிரி 2021 இன்னும் நல்லா இருக்கனும்.

**கேத்தி** (வயது 17) :சொல்லப் போனா 2020 ரொம்ப மோசமா தான் போச்சு, ஆனா எனக்கு ஸ்கூல் எல்லாம் லீவ் விட்டதால ரொம்ப சந்தோஷமா இருந்தேன். 2021 இதே மாதிரி லீவ் விடனும். அப்போதான் நான் அரசு தேர்வு எழுதாமலேயே பாஸ் ஆக முடியும்.

**சிரில் பெனடிக்ட்** (வயது 15) : நான் 2020இல் நிறைய விஷயங்கள் எதிர்பார்த்தேன், ஆனா எதிர்பார்த்த மாதிரி எதுவுமே நடக்கல. இந்த 2020 இல் நிறைய உயிரிழப்புகள் ஆகிடுச்சு, அதுனால 2021 நல்ல ஆண்டா வரும்னு எதிர்பார்க்கிறேன். 2021 எந்தவொரு நோய் தொற்றும் இல்லாம நல்லபடியா அமையனும். அது தான் என்னோட ஆசை.

**ஜீகி** (வயது 11) : 2020 ரொம்ப கொடூரமா இருந்துச்சு, நான் 2020 ரொம்ப எதிர்பார்த்தேன். ஆனா எல்லாமே மொக்கயா போச்சு, 2021 ஆச்சும் நல்லா அமையும்னு எதிர்பார்க்கிறேன்.

**ரெஜினா மேரி** (வயது 48) : 2020 நிறைய துன்பங்கள் கஷ்டங்கள் இருந்துச்சு, ஆனா ஆண்டவரை நம்பி இருந்தவங்கள ஆண்டவர் கைவிடல, எப்பவும் கைவிடமாட்டார். இவ்வளவு பெரிய நோய் தொற்று வந்தும் ஆண்டவர் நம்மள காப்பாத்தி வந்துருக்காரு. அதற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்வோம். அதே மாதிரி 2021 எந்தவொரு பஞ்சமும் கஷ்டமும் இருக்க கூடாது.

**எழில்** (வயது 31) : 2020 நன்றாக அமையும் என்று எதிர்பார்த்தேன், ஆனா 2020 கொரோனாவால என்னுடைய வாழ்க்கை பாதிச்சிருச்சு, ஆனா 2020 ஓட கடைசியில் எனக்கு ஒரு சிறப்பான ஆண்டாகவே அமைந்தது. 2019 நான் ஒரு

கம்பெனி இல் வேலை பார்த்து கொண்டு இருந்தேன். ஆனா 2020 கடைசியில் ஒரு கம்பெனியே சொந்தமாக்கும் அளவுக்கு உயர்ந்துட்டேன். இதற்கு எல்லாம் கடவுளுடைய ஆசிர்வாதம் தான் காரணம். என்னதான் தோல்விகள் கண்டாலும் முழு நம்பிக்கை கடவுள் மேல வச்ச இருந்தேன் அதனால தான் இவ்வளவு வளர்ச்சி கண்டு இருக்கேன். வரப்போகிற 2021 ஆண்டும் இதுபோல நான் வளர்ச்சி அடையட வேண்டும்.

**இறுதியாக...**

இந்த 2020 ஆண்டு பலருடைய வாழ்க்கையினை புரட்டி போட்டு இருக்கின்றது. வரப்போகின்ற 2021 ஆம் ஆண்டாவது நமக்கு விடிவு காலம் பிறக்குமா, அமைதியான சூழ்நிலை நிலவுமா என்ற எதிர்நோக்கோடு பலதரப்பட்ட மக்கள் உள்ளனர். இந்நிலையில் வெளிநாடுகளில் புதியதாக பரவிக்கொண்டு இருக்கும் நோய்களை கண்டு மக்கள் அச்ச உணர்வில் இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் ஆண்டவர் கூறுவது ஒன்றே **'அஞ்சாதே நான் என்றும் உம்மோடு இருக்கிறேன்'**. இந்த ஒற்றை வரியை மனதில் கொண்டு நம்பிக்கையுடன் காத்து இருப்போம். ஆண்டவர் என்றும் நம்மோடு இருக்கிறார்.

செல்வன். D. **சாம்சன்**

### புனித சூசையப்பர் ஆண்டு

## புனித சூசையப்பரை நோக்கி மன்றாட்டு



மீட்பரின் பாதுகாவரே வாழ்க.
கன்னி மரியாவின் துணையாளரே, வாழ்க
உம்மிடம் கடவுள் தம்முடைய ஒரே மகனை ஒப்படைத்தார்;
உம்மில் கன்னி மரியா நம்பிக்கை வைத்தார்;
உம்முடன் கிறிஸ்து மனிதரானார்.
புனித சூசையப்பரே எங்களுக்கு நல்ல தந்தையாய் இருந்து,
எங்கள் வாழ்க்கை பாதையில் எங்களுக்கு வழிகாட்டும்.
எங்களுக்கு அருள், இரக்கம், துணிவு ஆகிய புண்ணியங்களை பெற்றுத்தாரும்.
தீமையினின்று எங்களை காப்பாற்றும்.

--ஆமென்.

எம் குடும்பங்களின் பாதுகாவலரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
எம் திரு அவையின் பாதுகாவலரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



## டிசம்பர் மாதம் – 2020

### திருமணத்தில் இணைந்தவர்கள்

1. ஜெயபிரகாஷ் - பவுலின், கூனிபஜார்
2. எர்னஸ்ட் டேனியல்ராஜ் - பிரேமலதா, கெம்ஸ்டவுன்

# வெற்றியுடன் 2021

இப்புதிய ஆண்டு வெற்றியின் ஆண்டாய், எல்லா நலன்களும், வளங்களும் நிறைந்த ஆண்டாய் இருக்க வேண்டும் என்பது நம்முடைய விருப்பமாய் இருக்கிறது. உரோமையர் 8:37ல் நம்மேல் அன்பு கூர்ந்தவரின் செயலால் நாம் வெற்றி மேல் வெற்றி அடைகிறோம். நம்மேல் அன்பு கூர்ந்தவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவரை நாம் சார்ந்து கொள்ளும்போது வெற்றிமேல் வெற்றி அடைவோம். அவர் இல்லாமல் நமக்கு வெற்றி இல்லை, மேன்மை இல்லை, உயர்வும் இல்லை என்பதை மனதில் இருத்தி இந்த ஆண்டை தொடங்குவோம்.

1. **ஒளியில் நடப்போம்** : கடவுள் ஒளியாய் இருக்கிறார். அவரிடம் இருள் என்பதே இல்லை. இருளான காரியங்களை விட்டுவிடுவோம். பகலில் நடப்பவர் இடறி விழுவதில்லை. பெண்களாகிய நாமும் குடும்பத்திற்கு ஒளியாய் இருப்போம்.

2. **கட்டளைகளை கடைப்பிடிப்போம்** : நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவருடைய கட்டளை. குடும்ப தலைவிகளாகிய நாம் சொல்லிலும், பேச்சிலும் மட்டும் அல்ல செயலிலும் உண்மையான அன்பை வெளிப்படுத்துவோம். அவருடைய கட்டளைகளை கடைபிடிக்கும்போது அவர் நம்மோடு இணைந்திருப்பார். நம் குடும்பத்தோடு இணைந்திருப்பார்.

**3. பாவத்தை விட்டுவிடுவோம்** : கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும் (1 யோவா 5:4) கடவுளிடமிருந்து பிறந்தவர் பாவம் செய்வதில்லை. தீயோன் அவர்களைத் தீண்டுவதில்லை. தீச்செயல் அனைத்துமே பாவாம்தான். பாவத்தை கண்டால் பாம்பை கண்டது போல விலகியோடு என்று விவிலியம் நம்மை எச்சரிக்கிறது.

**4. கடவுளோடு இணைந்து வாழுவோம்** : திராட்சைக் கொடி அதன் செடியோடு இணைந்து இருப்பது போல நாமும் கடவுளோடு இணைந்திருப்போம். நீங்கள் என்னோடு இணைந்திருந்தாலன்றி கனி தர இயலாது என்று இயேசு கூறுகிறார். என்னோடு இணைந்து இருங்கள் என்று அறிவுறுத்துகிறார். என்னைவிட்டு பிரிந்து உங்களால் எதுவும் செய்ய முடியாது என்று கூறுகிறார். என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போல தறித்து எறியப்படுவர் என்றும் எச்சரிக்கிறார். (யோவா 15:6). அவரோடு இணைந்திருந்து மிகுந்த கனிகளை கொடுப்போம்.

பிரியமானவர்களே! உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு. எனினும், துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டு விட்டேன் (யோவா 16:33) என்கிறார் இயேசு. உலகத்தை ஜெயிக்கிற பொறுப்பை கடவுள் நம் கையில் கொடுத்துள்ளார். பிறந்திருக்கின்ற புத்தாண்டு வெற்றியின் நாட்களாக நமக்கு அமையட்டும்.

**திருமிகு. ஹேமா ஸ்டீபன்**

# திரு அவை செய்திகள்

- முதுபெரும்தந்தை போராயர் பிட்ஸபல்லா அவர்கள், வாழ்வில் எத்தகைய துன்பங்களை நாம் எதிர்கொண்டாலும், அவற்றுக்கு மத்தியிலும், நம் எதார்த்தத்தில், கடவுளின் பிரசன்னத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஆவியாரால் நாம் வழிநடத்தப்படவேண்டும் என்றும், நம் எண்ணங்களைப் புரட்டிப்போட, நம் எதிர்பார்ப்புக்களை வியக்கவைக்க, நமது இருப்பை அசைக்க, நம்மை விழித்தெழச் செய்ய இயேசு இவ்வுலகிற்கு வந்தார் என்று தன் கிறிஸ்துமஸ் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

- டிசம்பர் 21, திங்களன்று, வானில் கிறிஸ்துமஸ் விண்மீன் தெரியும் என்ற தலைப்புடன் செய்திகள் வெளிவந்தன. சூரியனைச் சுற்றிவரும் வியாழன், சனி ஆகிய இரு கோள்களும் ஒன்றின்மீது ஒன்று அமர்ந்திருந்ததைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தின. உண்மையில் இவ்விரு கோள்களுக்கும் இடையே உள்ள தூரம், 735 மில்லியன் கி.மீ அதாவது, 73 கோடியே 50 இலட்சம் கி.மீ. என்று இருந்தாலும், பூமியிலிருந்து காண்பவர்களுக்கு, அவை ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாக இருந்ததைப்போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கியது.

- இந்தியாவில், கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், சட்டீஸ்கார் ஆகிய மாநிலங்களில் அதிகம் இடம்பெற்றுள்ளன. UCF எனும் கிறிஸ்தவ ஒன்றிப்பு அவையின் கூற்றுப்படி, 2020 நவம்பர் முடிவு வரை இந்தியாவில், கிறிஸ்தவர்களுக்கு எதிரான 250 தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்களில் உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கார் ஆகியவை முன்னணியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மனித உரிமைகள் அமைப்புகளின் தேசிய அவை என்ற பொருள்படும் NCHRO என்ற நிறுவனம், மனித உரிமை போராளிகளுக்கென ஒவ்வோர் ஆண்டும் வழங்கி வரும் விருதுக்கு, அருள்பணி. ஸ்டான் சுவாமி அவர்களைத் தெரிவு செய்துள்ளது.

- புது தில்லியில் போராடும் வேளாண் குடிமக்களின் கோரிக்கைக்கு, இந்திய நடுவண் அரசு செவிமடுத்து, தற்போது நிறைவேற்றியிருக்கும் வேளாண் சட்டங்களை உடனே திரும்பப்பெற, தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

# இறைவாக்குத் தேடல்

(விவிலியப் பகுதி : தொடக்க நூல் 1-20 அதிகாரங்கள்)

குறிப்பு :

- பதிலைத் தனித்தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும், பெயர் அன்பியம், முகவரி குறிப்பிடவும், அதிகாரம் மற்றும் வசனம் குறிப்பிடவும்.
- பேராலய ஒலி இதழில் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்குத் தலைப்பு மற்றும் பக்கம் குறிப்பிட்டு எழுத வேண்டும்.
- குடும்பத்திற்கு ஒருவர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.
- சரியான விடை எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதத்தின் முதல் ஞாயிறு காலை 8.30 மணித் திருப்பலியில் சிறப்பிக்கப்படுவார்கள்.

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் :**
**பிரதி மாதம் 22ம் தேதிக்குள்**

## I. நிரப்புக

1. நீர்த்திரளின் மேல் ................. அசைந்தாடிக் கொண்டிருந்தது.
2. கடவுள் .............. நாளுக்கு ஆசி வழங்கி, அதைப் புனிதப்படுத்தினார்.
3. ................. என்னை ஏமாற்றியது, நானும் உண்டேன்.
4. .................. மாதத்தில் முதல் நாளில் மலை உச்சிகள் தெரிந்தன.
5. ஆகார் பெற்ற தம் மகனுக்கு ஆபிராம் ................ என்று பெயரிட்டார்.

## II. யார் யாரிடம் கூறியது?

1. உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய்.
2. நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா.
3. எனக்கும் உனக்கும் என் ஆள்களுக்கும் உன் ஆள்களுக்கும் இடையே பூசல் ஏற்பட வேண்டாம்.
4. உன் துயரத்தில் ஆண்டவர் உனக்குச் செவிசாய்த்தார்.
5. இதோ உன் சகோதரருக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்துள்ளேன்.

## III. பொருத்துக.

1. நோவா - எகிப்தியப் பணிப்பெண்
2. காம் - கீல் குழிகள்
3. சித்திம் பள்ளத்தாக்கு - அம்மோனியரின் தந்தை
4. ஆகாம் - இலாமேக்கின் மகன்
5. பென் அம்மி - கானானின் தந்தை

## IV. இதழில் தேடவும்

1. நம் பங்கிலிருந்து கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட எந்த கிராமத்திற்குச் சென்றோம்?
2. புனித வளனாரை உலகளாவிய திரு அவையின் பாதுகாவலராக அறிவித்த திருத்தந்தை யார்?
3. மனித உரிமை போராளிகளுக்கான விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர் யார்?
4. மெய்ஞானத்தால் என் ................. நிரப்பும்.
5. கடவுளிடமிருந்து பிறந்தவர் எதைச் செய்வதில்லை?

---

## டிசம்பர் மாதம் – 2020

## திருமுழுக்கு பெற்ற குழந்தைகள்

| | குழந்தையின் பெயர் | பெற்றோர் பெயர் |
|---|---|---|
| 1. | ஜேசலின் ரியோனா | ஆரோக்கியராஜ் கிளாடிஸ் ஜான்சன் - ரித்சியா செபினா மேரி |
| 2. | ஜாய் பெபின் | சற்குணா செபாஸ்டின் - பாக்கியசீலி ஜாக்குலின் |
| 3. | கவின் ஆன்டனி | சாலமன் ஆன்டனி - கவிதா |
| 4. | நேகா செரின் | ரஞ்சித் குமார் - ஜெயபிரதா |
| 5. | ஆரா இக்னேஷியா ரோஸ்லின் | இக்னேஷியஸ் ஆன்டோ ரெக்ஸ் - அமலா இன்பென்டா செர்லி |
| 6. | ஹேசின்த் | பிரான்கிளின் - பெனிடிக்டா லூசியா |

## டிசம்பர் மாதம் – 2020

## இறைவனில் இளைப்பாறுவோர்

தெய்வத்திரு. இந்திரா, வில்லியம்ஸ் ரோடு

**நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்**

# புனித மரியன்னை பேராலய அன்பியங்கள்

| தேதி | அன்பியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1.1.21 | புனித குழந்தை இயேசு | அருள்சாமி இல்லம், வார்னர்ஸ் ரோடு |
| 2.1.21 | புனித சவேரியார் | நெப்போலின் – ரேணுகா, கூனிபஜார் |
| 4.1.21 | புனித பிரான்சிஸ் சேவியர் | ஜான்சன் – ஜிரேஸ், கெம்ஸ்டவுன் |
| 5.1.21 | புனித ஆரோக்கிய அன்னை | மீரா – தங்கதுரை, மேலப்புதூர் |
| 6.1.21 | புனித மத்தேயு கபிரியேல் | ஸ்டீபன் – ஹேமா, மேலப்புதூர் |
| 7.1.21 | புனித ஆசீர்வாதப்பர் | ஜெயசீலி, மேட்டுத்தெரு |
| 8.1.21 | புனித மலைமாதா | போப் பிரான்சிஸ் ஹால் |
| 9.1.21 | புனித அந்தோணியார் | ஜோசப் ரீகன் – ஜோஸ்பின் பானு, கூனிபஜார் |
| 9.1.21 | புனித மரியம் தெரசா | தாமஸ் லியோ – மேரி, முதலியார் சத்திரம் |
| 11.1.21 | புனித மோட்சராக்கி மாதா | மோட்சராக்கினி மாதா கோவில், பூந்தோட்டம் |
| 11.1.21 | புனித பவுல் | கென்னடி – ஜெஸிந்தா இல்லம், வ.எடத்தெரு |
| 12.1.21 | புனித அருளானந்தர் | ஆரோக்கியசாமி – அல்போன்ஸா சகாயமேரி, வில்லியம்ஸ் ரோடு |
| 13.1.21 | புனித சந்தியாகப்பர் | ஆரோக்கியராஜ் – இசபெல்லா, கெம்ஸ்டவுன் |
| 13.1.21 | புனித லூர்தன்னை | காவலர் குடியிருப்பு |
| 14.1.21 | புனித செபஸ்தியார் | செபஸ்தியார் கோவில், கெம்ஸ்டவுன் |
| 15.1.21 | திருஇருதய ஆண்டவர் | அருள் ஜோசப் – நிர்மலா, கண்டித்தெரு |
| 16.1.21 | புனித செபஸ்தியார் | செபஸ்தியார் கோவில், கூனிபஜார் |
| 16.1.21 | புனித அடைக்கல மாதா | ஏசுராஜ் – ஜெயராணி, கோரிமேடு |
| 17.1.21 | புனித சிறுமலர் | யானைக்கட்டி மைதானம் |
| 18.1.21 | புனித பர்னபா | அமல்ராஜ் – டெல்மாரோஸ், ஆர்.சி.காம்பவுண்ட் |
| 19.1.21 | புனித ஜெஸ்டின் | வர்கீஸ் – நிர்மலா, நேமத்தான் தெரு |
| 20.1.21 | புனித சகாயமாதா | அல்போன்ஸ் அம்மா, இ.பிள்ளையார் கோ.தெரு |
| 21.1.21 | புனித அந்தோணியார் | நிக்ஷன் – செல்வி, மார்சிங்பேட்டை |
| 22.1.21 | புனித அன்னை தெரசா | பெலிக்ஸ் – அசந்தா, ஒத்தக்கடை |
| 23.1.21 | புனித வளன் | பென்னாட் – ஜூடி ஷெரின், கண்டித்தெரு |
| 25.1.21 | புனித செசிலியா | கான்வென்ட் ரோடு |
| 26.1.21 | புனித அமலோற்பவ மாதா | ரிச்சர்ட் – ரோஸ்லீன் ஸ்டெல்லா, காஜாப்பேட்டை |
| 27.1.21 | புனித மரியன்னை | ஜெயில் பேட்டை |
| 28.1.21 | புனித செல்வநாயகி மாதா | மெல்வின் – சந்தனகுமார், ஆலம் தெரு |

## திருக்குடும்ப பெருவிழா






## மாசில்லாக் குழந்தைகள் விழா







# கிறிஸ்துமஸ் பகிர்வு கொண்டாட்டம் - முத்தனம்பட்டி












## குடில் போட்டியில் பரிசு பெற்றவர்கள்



## கிறிஸ்துமஸ் கேரல்ஸ்









## கிறிஸ்துமஸ் நள்ளிரவு திருப்பலி





## புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி



